சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 29.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **24/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | சூர்யா |
| தந்தை பெயர் | : | சங்கர் |
| கிராமம் | : | மலையூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 26 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. R. வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக முதன் முதலாக யாரிடம் புகார் கொடுத்தீர்கள் என்றால் போலீஸ் ஸ்டேஷன் போய் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரானது வாக்குமூலமாகத்தான் கொடுத்தேன். என்னுடைய தந்தையார் சங்கர் என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் சங்கர், 1ம் எதிரியிடம் ரூ.3,00,000/- கடன் வாங்கியிருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் இறந்த பின்னர், 1ம் எதிரி எனக்கும், எனது தாயாரான அ.சா2. சுமதி என்பவருக்கும், என் தகப்பனார் வாங்கிய கடனை அடைக்க வேண்டும் என கூறி ஒரு அறிவிப்பு இருந்தார் என்று சொன்னால் ஆமாம் அனுப்பியிருந்தார். அந்த அறிவிப்பை பெற்றவுடன், கடந்த 16.05.2020 ம் தேதி அன்று மாலை 03.50 மணியளவில் நானும், என்

தாயாரான அ.சா.2 சுமதி, மற்றும் 9 நபர்களும் சேர்ந்து 1ம் எதிரி நடராஜனின் வீட்டிற்கு சென்று 1வது எதிரி நடராஜன், அவரது மகன் கங்காதரன் ஆகிய இருவரையும் கம்பு, மற்றும் கத்திகளால் தாக்கி காயப்படுத்தினீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 1ம் எதிரி என் மீதும், என் தாயார் மீதும் சேர்த்தும், மற்றும் 9 நபர்கள் என மொத்தம் 11 நபர்கள் மீது கொரடாச்சேரி காவல் நிலையத்தில் புகார் அளித்து அதன் பேரில் மேற்படி காவல் நிலையத்தில் குற்ற எண் 911/2020 என்ற எண்ணின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் நான் நீதிமன்றக் காவலுக்கு சென்று, பின்னர் நான் பிணையில் வெளியில் வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான், அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பின்னிட்டு இந்த வழக்கை ஜோடித்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போன்று, என்னை, 1, 2 எதிரிகள் யாரும் ஜாதியின் பெயரை சொல்லி திட்டவும் இல்லை, எங்களை அடித்து காயப்படுத்தவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையார் வாங்கிய கடனை முழுமையாக செலுத்தாமல் இருப்பதற்காகவும், நாங்கள் தாக்கிய வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவும், பின்னிட்டு ஜோடித்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.29 17:56:34 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.